**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | |
|---|---|
| Case No. | : CC No.854/2025 |
| Deposition of witness for Prosecution | : P.W– 2 |
| Name | : மீஹா, வயது 47 |
| Father Name/Husband Name | : ராமசுவாமி |
| Village | : கோவில்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of June 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கோவில்பட்டி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 11.07.2024 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் இன்பராஜ், தலைமை காவலர் தங்கமாரியப்பன் மற்றும் தலைமை காவலர் தாமோதரன் ஆகியோர் சகிதம் ரோந்து செய்து கயத்தார், சுடலைமாடசுவாமி கோவில் அருகே ரோந்து செய்து வரும்போது பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த உத்தண்டம், வயது 53, த.பெ. ராஜா என்பவர் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்குபையை சோதனை செய்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Veeran brandy 8 எண்ணம் வைத்திருந்ததை அத்தாட்சியில் கைப்பற்றி நிலையம் 10.00 மணிக்கு வந்து நிலையகுற்ற எண். 415/2024, சட்டபிரிவு 4(1)(a) TNP Act ஆக வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளை விசாரணை செய்து வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இவ்வழக்கில் சம்பவம் உண்மை என புலனானதால் 11.07.2024 ஆம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். மேலும் நிலைய ஆவணங்களை பார்வையிட்ட போது 17 வழக்குகள் உள்ளது.

**(அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.4 ஆகவும் மற்றும் சுமார் 180 ML அளவு கொண்ட Veeran brandy 8 எண்ணம் அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2 போலீசார் சம்பவ இடத்திற்கு சென்றபோது மது விற்பனை நடைபெற்று கொண்டிருந்ததாக அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான் ஆனால் எதிரி மது விற்பனைக்காக கை வசம் மதுபாட்டில்களை வைத்துக் கொண்டிருந்தார். நான் அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் குடியிருப்பு பகுதி என்றால் சரிதான். வழக்கு சொத்து கைப்பற்றபட்டதற்கு அத்தாட்சியில் தனிநபரிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான், சாட்சிக்கு அழைத்ததற்கு யாரும் முன்வரவில்லை. சாட்சியாக முன்வராத நபர்களுக்கு அறிவிப்பு கொடுக்கபட்டதா என்றால் அவர்கள் அவர்களது விவரங்களை தரவில்லை என்பதால் கொடுக்க முடியவில்லை. மேற்படி விவரங்கள் வழக்கு கோப்பில் துலங்காது என்றால் சரிதான்.

3 நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken before me in open court
in the presence of accused and
read over to the witness and
acknowledged by him/her to be
Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.